# பகவதுஜ்ஜுக அங்கதம்

மகேந்திரவிக்கிரமவர்ம பல்லவன்

# பகவதஜ்ஜுக அங்கதம்

Tamil Heritage Foundation

மகேந்திரவிக்கிரமவர்ம பல்லவ மன்னன்

எழுதிய

அங்கத நாடகம்

பதிப்பாசிரியர்:
மைக்கேல் லாக்வுட்

தமிழாக்கம்:
இ. ஜாண் ஆசீர்வாதம்

CLS

கிறிஸ்தவ இலக்கிய சங்கம்

THE CHRISTIAN LITERATURE SOCIETY
POST BOX 501, PARK TOWN, MADRAS 600 003

BHAGAVADAJJUKA PRAHASANA
A Philosophical Farce by
KING MAHENDRAVIKRAMAVARMA PALLAVA

Edited and translated from
the Sanskrit and Prakrit by
MICHAEL LOCKWOOD and
A. VISHNU BHAT

Translated into Tamil
by E. JOHN ASIRVATHAM

© MICHAEL LOCKWOOD
*First printed, 1979*

விலை ரூ. 2.00

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1979. B766

# முன்னுரை

Tamil Heritage Foundation

தென்னிந்திய மன்னனான மகேந்திரவர்மனால் எழுதப்பட்ட இந்த பகவதஜ்ஜுகம், மற்றும் இதைப்போன்று மத்தவிலாசம்—இவ்விரண்டு நாடகங்களுமே இந்திய இலக்கியத்துறையில் அங்கத நாடகங்களுக்கு மிகப் பழமையான எடுத்துக்காட்டுகளாம். துரதிர்ஷ்டவசமாக மகேந்திரவர்மனின் இந்த முன்னணிப் படைப்பு சாதாரண மக்களிடையே அறிமுகமாகவில்லை. சில அறிஞர்கள் பகவதஜ்ஜுகத்தை அவனுக்குரியதாக அங்கீகரிக்கத் தவறியதே இதற்குக் காரணம். நாடகத்தின் முதற் பகுதியிலுங்கூட ஆசிரியர் பெயரேதும் குறிப்பிடப்படவில்லை. இன்னும் பிற்கால உரையாசிரியர்கள் சிலர் போதாயனருக்கும் மற்றும் பரதமுனிக்கும் இந்நாடகத்தை உரிமையாக்கியுள்ளனர். ஆக்கியோன்பற்றிய இந்த அதிசய யூகங்கள் சில அறிஞர்களிடையே குழப்பத்தை விளைவித்துள்ளன. ஆனால், அத்தகைய குழப்பம் ஒன்றும் தேவை இல்லை. வரலாற்று உண்மைகள் இந்த இரண்டு அங்கதங்களையும் மகேந்திரவர்மனே எழுதினான் என்பதை வலியுறுத்துகின்றன. பகவதஜ்ஜுகத்தின் ஆங்கிலப் பதிப்பில் இதைப்பற்றி விரிவாக விவாதித்துள்ளோம்.

ஏறத்தாழ கி.பி. ஏழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மகேந்திரவர்மன் ஆட்சி புரிந்து வந்தான். காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த மாபெரும் மன்னர்களுள் அவன் ஒருவன். இலக்கியத்தில் மட்டுமன்றி, இசையிலும், கோவில் கலையிலும்கூட முன்னோடியாக விளங்கினான், முதன் முதலாக தமிழகத்திலே குகைக் கோவில்களை அமைத்தவன் அவனே. மாமல்லபுரத்தின் கற்கோவில்களும், சோழர்களின் பெருங் கற்கோவில்களும் இவனது படைப்புத்திறனைப் பின்பற்றி எழுந்தவைகளே.

பகவதஜ்ஜுகத்தின் கருப்பொருள்—ஆன்மா என்று ஒன்று உண்டு என்பதை யோகி ஒருவன் தனது காரியவாத கோமாளிச் சீடனுக்கு உணர்த்த முயற்சிப்பதை மையமாகக்கொண்டது. நாடகத்தின் ஒரு கட்டத்தில் அந்த யோகி தனது யோக பலத்தால் அப்பொழுது தான் அரவம் தீண்டி இறந்த இளங்கணிகை ஒருத்தியின் அழகிய

உடலுக்குள் தனது சொந்த ஆன்மாவைச் செலுத்தி ஆன்மா ஒன்று உள்ளது என்பதை தனது சீடனுக்கு விளக்கிக்காட்ட முயலுகிறான். ஆனால், இந்த ஆன்ம மாற்றத்தால் உண்டான குழப்பத்திலே கணிகையின் உடலை அணுகியிருந்த யோகிக்கு எந்த வகையிலும் தனது கருத்தைச் சீடனுக்கு விளக்க வாய்ப்பில்லாமல் போகிறது. சீடன் உட்பட அனைவரும் கணிகையின் பேச்சும் நடவடிக்கைகளும் விபரீதமாகவுள்ளதை உணருகிறார்கள். ஆனால், யோகியின் ஆன்மா அவளது உடலைப்பற்றியுள்ளதன் விளைவுதான் அது என்பதை ஒருவரும் புரிந்துகொள்ளவில்லை.

இந்த நகைச்சுவை நாடகத்தின்மூலம் மன்னர் மகேந்திரவர்மர் தமது காலத்தில் நிலவிய மதச்சார்பான கேலிக்கிடமான குறைபாடுகளைப் படம் பிடித்துக் காட்டுகிறார். இதன் மூலமாக 1300 ஆண்டுகளுக்கு முன்னான தமிழகத்தின் வாழ்க்கை நிலையின் அரிய காட்சிகள் நமக்குப் புலப்படுகின்றன.

தாம்பரம் எம். சி. லாக்வுட்

மன்னர் மகேந்திரவர்மனின்

# பகவதஜ்ஜுக அங்கதம்

## பாத்திரங்கள்

**சூத்திரதாரி:** அரங்க மேற்பார்வையாளர் (அங்கத்தின் பொறுப்பாளி).

**விதுசகன்:** கோமாளி (சூத்திரதாரியின் கோமாளித் துணைவன்).

**பரிவிராசகர்:** துறவி (சுற்றித் திரிகின்ற இந்து சமயத் துறவி).

**சாண்டில்யன்:** பரிவிராசகரின் சீடன்.

**ராஜகணிகை:** சொந்தப் பெயர் வசந்தசேனை. அஜ்ஜுகா என்று மரியாதையுடன் அழைக்கப்படுபவள்.

**பணிப்பெண் மதுகாரிகா.**

**பணிப்பெண் பரப்பிரிதிகா.**

**எமதூதன்.**

**தாய்:** வசந்தசேனையின் தாய்.

**இராமிலகன்:** வசந்தசேனையின் காதலன்.

**மருத்துவர்.**

# பகவதஜ்ஜுக அங்கதம்

*(கடவுள் வாழ்த்துக்குப் பின் சூத்திரதாரி நுழைகிறார்)*

1. **சூத்திரதாரி:**

தேவர் தேவனும் இந்திரன்
தனது மகுடமணி தேயும் வகை பணியும் பாதங்கள்,
இராவணன் அழுங்கப் பதிந்த விரல், அவ்
வலிய விரல்தான் பொருந்திய பாதங்கள்
என்றும் போற்ற வரும் புண்ணிய பாதங்கள்
உருத்திர சிவ பாதங்கள் காக்கட்டும்.

இதோ நமது இல்லம். உள்ளே போவோம்.

*(நுழைதல்)*

விதுசகா! விதுசகா! *(விதுசகன் வருகிறான்.)*

2. **விதுசகன்:** ஐயா, இதோ இருக்கிறேன்.

3. **சூத்திரதாரி:** இங்கே வேறு யாரும் இல்லையென்றால் இனியது ஒன்று சொல்கிறேன்.

4. **விதுசகன்:** அப்படியே ஆகட்டும். *(குறுக்காக நடந்து உள்ளே வருகிறான்)* யாரும் வீட்டில் இல்லை. அதனால் இனியது அதைச் சொல்லுங்கள்.

5. **சூத்திரதாரி:** அப்படியானால் கவனி. இன்று நான் நகரத்தை விட்டு வெளியில் வரும்போது ஒரு குறி சொல்லுகிற ஜோதிடக்கார அந்தணன் என்னிடம் சொன்னான்:

'இன்று ஏழாம் நாள் அரசருக்கும் அவன் குடும்பத்தினருக்கும் முன் ஒரு நாடகம் ஆடிக் காட்டப்போகிறாய். உனது நடிப்பால் அரசர் மகிழ்ந்து உனக்குப் பரிசளிப்பார். நீ பெரும் பணக்காரனாவாய்' என்றான். அந்தணனின் கூற்று உண்மையா என்று காண ஆசைகொண்டுள்ளேன். ஆகவே இசைக்கான ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

6. **விதுசகன்:** எந்தவிதமான நாடகம் போடுவீர்கள் ஐயா?

7. **சூத்திரதாரி:** இப்பொழுது என்னைச் சிந்திக்கவிடு. நாடகங்கள் பத்து வகை உண்டு. வார[1], இஹம்ரிக[2], திம[3], சமவக்கார[4], வியாயோக[5], பாண[6], சல்லாப[7], வீதி[8], உத்சிரிஷ்டிகாங்க[9], பிரஹஸன[10].

---

[1] வேண்டுதல் நாடகம். [2] ஒருதலைக் காதல் நாடகம். [3] முற்றுகை (இடல்) நாடகம். [4] தொடர்பற்றுத் துவங்கி ஒன்றாகக் கூடிவரும் நாடகம். [5] போர்ப்பூசல் நாடகம். [6] ஓர் ஆள் காதல், வீர நாடகம். [7] தொடர்பற்ற பேச்சு உரையாடல் நாடகம். [8] ஒருவர் அல்லது இருவர் காதல் நாடகம். [9] ஓரங்க துக்க நாடகம். [10] அங்கத நாடகம்.

எல்லாம் மரபு வழி நாடகப் பாணியைப்பற்றி வருவன. பத்துவித உணர்வுகளைப் படம்பிடித்துக் காட்டுவன. நான் குறிப்பாக நகைச்சுவையில் நாட்டங்கொண்டவன். ஆதலின் அங்கதமே போடவிடு.

8. **விதுசகன்:** அங்கதம்போன்ற அந்தவித நகைச்சுவை எனக்குத் தெரியாதே ஐயா!

9. **சூத்திரதாரி:** அப்படியானால் கற்றுக்கொள். கற்பிக்காமல் எதையும் விளங்கிக்கொள்ளுவது சாத்தியமன்று.

10. **விதுசகன்:** அப்படியானால் கற்பிக்கவேண்டியது தாங்களே!

11. **சூத்திரதாரி:** சரி, தெரிந்துகொள்ள நீ தீர்மானித்துவிட்ட படியால் புண்ணியப் பாதையில் செல்லும் ஒருவனையே நீயும் பின்பற்று.

(திரைக்குப்பின்)

12. **பரிவிராசகர்:** சாண்டில்யா! சாண்டில்யா!

13. **சூத்திரதாரி:** (கேட்டு) பின்னே வா! அந்தணத் துறவியைப் பின்பற்றுவதுபோல என் பின்னே வா.

(இருவரும் போகிறார்கள்)

**முன்னுரை முடிந்தது**

(பரிவிராசகர் நுழைகிறார்)

14. **பரிவிராசகர்:** சாண்டில்யா! சாண்டில்யா!

(சுற்றிப் பார்த்துவிட்டு) இப்படித்தான் இவன் மறைந்து போவான். அறிவற்று இருட்டில் வாழ்பவனாயிற்றே. ஏனென்றால்:

மூப்பின் பயனால் பிணியின் சுரங்கம் இவ்வுடலம் மறைந்துறையும்
தீமை விளிம்பில் உழலுவது; திரைகளுக்கீடுதரும் ஆற்றங்கரை மரம்
போலும் முன்வினையால் மறுவுடலாய் வந்தாலும்,
அழகொடு இளமை ஆதிக்கம்
தோற்றம் இதனால் ஏமாந்து
குற்றமெனும் சவக்குழிக்கே
குருடாய் ஏகிச் செல்பவன் மனிதன்.

அதனால் இந்த அப்பாவியை நொந்துகொள்ளுவதால் பயனில்லை. இன்னும் ஒரு தடவை அழைப்போம்.

சாண்டில்யா! சாண்டில்யா!

(சாண்டில்யன் வருதல்)

15. **சாண்டில்யன்:** காக்கைக்கு மிஞ்சிய பலியுணவால் வாழ்ந்த ஒரு குடும்பத்தில் நான் பிறந்தேன். புனிதப் பூனூல் அணிந்து எங்கள் அந்தணத்தன்மையில் நாங்கள் பெருமை கொண்டிருந்தோம். நாங்கள் முற்றிலும் எழுத்தறிவற்றவர்களாய் இருந்தோம். இரண்டாவது, எங்கள் வீட்டில் உணவில்லாதபடியால் நான் பசியுடன் இருந்தேன். காலை நேரமாவது உணவு கிடைக்கும் என்ற நினைவால் புத்த மதத்திற்கு மதம் மாறிப்போனேன். இன்றும் அந்த அயோக்கியர்கள் ஒருவேளை மட்டும் உண்ணுகிறபடியால் பசியாறுமல் இருந்து அந்த மதத்தையும் விட்டுவிட்டேன். அங்கியைக் கிழித்தேன். திருவோட்டையும் உடைத்தேன். குடையை மட்டும் விடாமல் வெளியேறினேன். மூன்றுவது, இந்த நீசப் பண்டிதனின் பாத்திரங்களைச் சுமக்கின்ற கழுதையாக மாறிவிட்டேன்.

இந்த சாமி எங்கே போனுரோ? ஓ . . . இப்படித்தானிருக்கும். இந்த உட்பூச்சு ஆசாமி காலை உணவுக்காகத்தானே யாசிக்கப் புறப்பட்டுவிட்டார்போல் தெரிகிறது. அப்படியானுல் இந்த சாமியை தூர இடத்தில் தான் தேடணும். (கடந்து நின்று பார்த்தவண்ணம்) இதோ . . . ஆண்டவர் . . . (நெருங்கி) மன்னிக்கவேண்டும். மன்னிக்க வேண்டும். ஆண்டவரே மன்னிக்கவேண்டும்.

16. **பரிவிராசகர்:** சாண்டில்யா! பயப்படாதே, பயப்படாதே!

17. **சாண்டில்யன்:** ஆண்டவனே! இன்பத்துக்கே இடமறிந்து முடிவில்லாத விழாக்களையுடைய இந்த உலகத்தில் நீங்கள் யாசிக்கும் முறைதான் என்ன?

18. **பரிவிராசகர்:** கேள்:

Tamil Heritage Foundation

வசைகேட்டும் வாடாதே இவ்வுலக
மிசை வாழ எது வேண்டும் அதுமட்டில் யாசித்து;
வருகவலை கருத்து எனும் இவை துறந்த உலகின்வழி;
மிக வாழவாழியினுள் அச்சுறுத்தும் ஐந்துவையும்
கருதுதலை இல்லாத ஒருவனென அப்பால் நான்
அசைந்தசைந்து செல்லுகிறேன்.

19. **சாண்டில்யன்:** ஐயனே நின் ஆசியின்றி அப்பனென்று
அண்ணனென்று
மெய்யாகவே ஆருமில்லை எந்தனுக்கு
ஆயினும் நின் புண்ணியத்தின் பாதையினை
நண்ணியல்ல;
உய்யவொரு உணவில்லாக் காரணந்தான்
இங்கே நான் வந்தனனே இவ்வழிக்கே.

20. **பரிவிராசகர்:** சாண்டில்யா, என்ன (இது) இப்படிப் பேசுகிறாய்?

21. **சாண்டில்யன்:** பொய் சொன்னால் கருமங்கள் வந்தடையும் என்று ஆண்டவரே சொல்லவில்லையா?

22. **பரிவிராசகர்:** பிறகென்ன? மாயையை மெய்யென்று பிறழக் கொண்டதால் வந்த பந்தங்கள்தான் இவை.

ஏனென்றால்:

ஆசைகளை உள்ளடக்கி வாஞ்சையுடன் கடமைகளை
வகையுடனே முடித்திடினே வரும் வரமாம் கனியதனை
அவர்க்கெனவே இறைவருமே அந்தம் வரைப்பேணி வைப்பார்.

23. **சாண்டில்யன்:** அந்த கனி எப்போ கிடைக்கும்?

24. **பரிவிராசகர்:** பற்றின்மீது பணத்தின்மீது அசட்டை உணர்வைப் பெறும்போது.

25. **சாண்டில்யன்:** அதை எப்படிப் பெறுவது?

26. **பரிவிராசகர்:** பந்தம் அறுத்து.

27. **சாண்டில்யன்:** ஆண்டவனே, அப்படியானால் மறுபடியும் வினவுகிறேன். பந்தமறுப்பதா? அது என்ன?

28. **பரிவிராசகர்:** அதுதான் நடுநிலைமை. விருப்புக்கும் வெறுப்புக்கும் ஊடான ஒரு நடுவழி.

அதாவது:

வாழ்வெனினும் தாழ்வெனினும் ஒன்றாகட்டும் ஆபத்தோ
ஆனந்தமோ அசைவற்றிரு. பற்று பகை இரண்டினையும்
ஒன்றென்றென்று அறிந்தார்க்கு அந்நிலையே பந்தமின்மை.

29. **சாண்டில்யன்:** அப்படியும் உண்டோ?

30. **பரிவிராசகர்:** இல்லாததைச் சொல்லமாட்டோமே!

31. **சாண்டில்யன்:** அதை அடைவது கூடும் என்கிறாரா ஆண்டவர்?

32. **பரிவிராசகர்:** அதில் சந்தேகமா?

33. **சாண்டில்யன்:** பொய், இது பொய்.

34. பரிவிராசகர்: அது எப்படி?

35. சாண்டில்யன்: அது மெய்யானால் ஆண்டவர் என்மீது ஏன் கோபங்கொள்ளுகிறார்!

36. பரிவிராசகர்: நீ படிக்காத காரணத்தால்தான்.

37. சாண்டில்யன்: நான் படிக்கிறேன் இல்லாவிட்டால் இல்லை. எல்லாவற்றையும் துறந்த உமக்கு அதைப்பற்றி என்ன கவலை?

38. பரிவிராசகர்: இல்லை. அது அப்படி இல்லை. (தனது கைத்தடியால் அடித்துவிடுகிறார். பிறகு தனது முறையற்ற செயலுக்காக சிரித்துச் சமாளிக்கிறார்.) சீடனாகும் ஒவ்வொருவனுக்கும் அடிபடுவது விதிமுறைக்கு அப்பாற்பட்டதல்ல. அதனால் கோபக்குறி ஒன்றுமின்றி உன்னை அடித்துவிட்டேன்.

39. சாண்டில்யன்: அழகு! அழகு! கோபமில்லாமலேயே ஆண்டவன் என்னை அடிக்கிறார். விடுங்கள் அந்தக் கதையை. யாசகத்துக்கு நேரம் வந்தது.

40. பரிவிராசகர்: முட்டாள். மதியங்கூட ஆகவில்லை. உலக்கையை ஒதுங்க வைத்து, உலை நெருப்பை அணைத்த பிறகு வீட்டுக்காரர்கள் சாப்பிட்ட பிறகுதான் சரியான நேரம். அதனாலே அதோ சோலை . . . அங்கே போய் இளைப்பாறலாம்.

Tamil Heritage Foundation

41. சாண்டில்யன்: ஆ . . . ஆஹா . . . ஆண்டவனே, சபதம் முறித்துவிட்டார்.

42. பரிவிராசகர்: எப்படி?

43. சாண்டில்யன்: ஓய்வு எதற்கு? வாழ்வும் தாழ்வும் ஆண்டவனுக்கு ஒன்றுதானே.

44. பரிவிராசகர்: ஏனில்லை, வாழ்வும் தாழ்வும் என் ஆன்மாவுக்கு ஒன்றுதான். என்னுடைய உடலோடுகூடிய உயிர்தான் ஓய்வை நாடுகிறது.

45. சாண்டில்யன்: ஆண்டவனே, அதென்ன ஆன்மா என்பது? அதென்ன உடலோடுகூடிய உயிர்?

46. பரிவிராசகர்: கேள்:

ஆழுறக்கம் கொள்கையில் ஆகாசத்தும் எட்டிவிடும்
ஆன்மாவின் ஆதிக்கம்.
உடலோடு உயிரென்றால் விதிவழியே உழன்றுவரும் ஒரு
மணல் பாண்டமாகும்.

47. சாண்டில்யன்: காலத்தைக் கடந்தது. அழிவில்லாதது. அரூபமானது. பிரிக்கமுடியாதது ஆன்மா எனப்படுவது. சிரிப்பது, சிரிக்கவைப்பது, உறங்குவது, உண்ணுவது, அழிவுக்கு இலக்கணமானது, உடலோடுகூடிய உயிர் என்பது.

48. பரிவிராசகர்: எதுவரை உன்னால் முடியுமோ அதுவரை புரிந்துகொண்டாய்.

49. சாண்டில்யன்: ஆஹா! அப்படி வாரும்! அகப்பட்டுக் கொண்டீர்.

50. பரிவிராசகர்: எப்படி?

51. சாண்டில்யன்: மறுபடியும் அதே பிரச்சினை. உடம்பின்றி ஒன்றுமில்லை.

52. பரிவிராசகர்: பேதா அபேதங்களைப் பிரதிபலிக்கும் உலக ஒழுக்கத்தைச் சொல்லிவிட்டாய். அதனால்தான் நாம் இப்படிச் சொல்லிக்கொடுத்தோம்!

53. சாண்டில்யன்: அது இருக்கட்டும். நீர் யார்?

54. பரிவிராசகர்: கேள் . . .

நீரொடு காற்று ஒளி ஆகாயமென்று புகல்
உலகியல் கூறு எலாம்
அசைவாடும் வகையினிலே ஓரிடத்துக் கூடினவை
ஊறு ஒளி நாற்றமதை உள்ளபடி உணருபவை
விலங்கினமோ அன்றி அதை ஒத்து இங்கு உள்ள ஒரு
உறவினமோ மனிதனெனப்படுபவன் நான்.

55. சாண்டில்யன்: ஆஹா . . . உம்மையே தெரிந்துகொள்ள வில்லை இதுவரை, உள்ளேயுள்ள ஆன்மாவைப்பற்றி எப்படித் தெரியப்போகிறது? (பார்த்து) ஆண்டவனே, இதோ சோலை.

56. பரிவிராசகர்: நீ முதலில் உள்ளே போ! இந்த தனிக்காட்டு செவ்வகத்தில் இளைப்பாறலாம்.

57. சாண்டில்யன்: ஆண்டவனே முதலில் நுழையட்டும். நான் பின்னாக வருகிறேன்.

58. பரிவிராசகர்: ஏன்?

59. சாண்டில்யன்: அதோ, அந்த அசோக மரத்தருகே புலி உண்டென்று என் அன்னை என்னை மிரட்டுவதுண்டு. ஆண்டவனே அதனால் முன்னே போகட்டும்.

60. **பரிவிராசகர்:** சரி, ஆகட்டும். *(அவர்கள் நுழைகிறார்கள்.)*

61. **சாண்டில்யன்:** ஐயோ, புலி பிடித்துக்கொண்டதே! புலியின் பிடியிலிருந்து விடுவியுங்கள்! கிழித்துப் போடுகிறதே புலி. இரத்தம் வேறு கழுத்து வழியே சாடுகிறதே.

62. **பரிவிராசகர்:** சாண்டில்யா, பயப்படாதே! அது மயில்தான்.

63. **சாண்டில்யன்:** உண்மையிலேயே மயிலா?

64. **பரிவிராசகர்:** பின்னே என்ன? நிச்சயமாக மயில்தான்.

65. **சாண்டில்யன்:** அது மயில் என்றால் கண்ணைத் திறக்கிறேன்.

66. **பரிவிராசகர்:** நிச்சயமாக.

67. **சாண்டில்யன்:** ஓஹோ, அந்த அற்பப்பயல் புலி மயிலாக உருமாறிக்கொண்டு என்னைவிட்டுப் பயந்து ஓடுகிறது. *(சோலையை சுற்றிப் பார்த்து)* ஹி . . . ஹி . . . வசந்தம் மாலை போல சூழ்ந்துள்ளதே.

சம்பகம், அர்ச்சுணம், கதம்பம், நீப்பா, நிச்சுலம், திலகம், குரபகம், கணிகாரம், கற்பூரம், சூத, பிரியங்கு, சாலம், தாலம், தமாலம், புன்னை, நாகம், பகுலா, சரளம், சர்ஜம், சிந்துவாரம் திரிணசூல்யா, சப்தபரணம், கரவீரம், குடஜவகினி, சந்தனம், அசோகம், மல்லிகை, நந்தியா வட்டம், தகரம், காதிரம், கதளி, மாலதி . . .

கொத்தான இளந்தளிர்கள், மலரும் மலர் இதழ்கள் . . . வளைந்துவிழும் மொக்கு நிறைந்த பறலதிக் கொடி மயிலோடு குயிலின் தாளங்கொண்டு, மதுவுண்ட வண்டினமும் இன்பம் கொடுப்பதோடு காதலரைப் பிரிந்து துன்பம் நிறைந்ததான இள மங்கையரின் இதயங்களைத் தூண்டுகின்றனவே! என்னே அழகு.

68. **பரிவிராசகர்:** முட்டாள், உயிர் நிலையினை நாளுக்கு நாள் இழந்துகொண்டிருக்கிற உனக்கு அழகைப்பற்றி என்ன கவலை?

முன்போதுத் தாரோடு வசந்தம் வரும்
பின்னரொரு பல்லாயிரம் கமலமுடன்
சொன்ன இளவேனில் வரும்
சின்ன ஒரு குழவி இது பருவங்கண்டு தான் களிக்கும்
இன்னுயிரைப் பிரித்திடினும்
என்னே இது அழகெனும் அர்த்தமின்றி.

69. **சாண்டில்யன்:** ஒன்று அழகாய் இருந்தால் அதை அழகு என்றுதான் சொல்லுவோம்.

70. **பரிவிராசகர்:** அசட்டைப் பேச்சு.

எட்டாத பொருளுக்குக் கொட்டாவி விட்டவர்கள்
கிட்டாத தெண்ணியே காலங் கழிப்பவர்கள்
ஓட்டாத ஆசையினை அழியாதிருப்பவர்கள்
பட்டாங்கில் எஞ்ஞான்றும் உய்யாதிருப்பவர்கள்.

71. **சாண்டில்யன்:** களைப்பூட்டும் பாதை, எங்கே இளைப் பாறுவது?

72. **பரிவிராசகர்:** நல்லது, இங்கேயே இரு.

73. **சாண்டில்யன்:** அழுக்கு, அழுக்கு.

74. **பரிவிராசகர்:** காட்டு நிலம் அழுக்கற்றது.

75. **சாண்டில்யன்:** களைப்பாகி உட்கார வேண்டுமென்றால் அழுக்கையும் சுத்தமென்கிறீர்கள்.

76. **பரிவிராசகர்:** வேத விதிகளையே குறிப்பிட்டேன். நானாகச் சொல்லவில்லை.

புகழ் போதை ஏறுகையில்
பிழையதனையும் பொறையென்பர்
அவ்வழியே எதுவொன்றும் ஆன்மமல்ல
அப்படியே உலகியம் அவையெல்லாம்.

77. **சாண்டில்யன்:** எத்தனை பெரிய சிந்தனையாளர் தாங்கள், தங்களுக்குமேல் வேத விதி எங்குள்ளது?

78. **பரிவிராசகர்:** அல்ல அப்படியல்ல.

ஆன்றோர் அரிதியிட்டுச் சொன்னதுவே அலையாத தன்மையதே சாத்திரமாம். சாத்திரத்தின் வேறான பொய்யான சாத்திரங்களை சாற்றினது இல்லையவர் அவ்வொன்றே மெய்யாகும்.

79. **சாண்டில்யன்:** நன்று! உங்களுக்குமேல் ஒரு சாத்திரத்தை எனக்குத் தெரியாது, நீங்கள்தான் உயர்ந்த சிந்தனை யாளர்.

80. **பரிவிராசகர்:** வா மகனே பாடங்கேள்!

81. **சாண்டில்யன்:** நான் பாடங் கேட்க மாட்டேன்.

82. **பரிவிராசகர்:** ஏன்?

83. **சாண்டில்யன்:** வைதீகக் கல்வியின் பொருளை அறிய விரும்பு கிறேன்.

84. **பரிவிராசகர்:** வேதங்களைக் கற்பவரும் அதன் பொருளைப் போகப் போகத்தான் புரிந்துகொள்ளுகிறார்கள். அதனால் பாடங்கேள்.

85. **சாண்டில்யன்:** நான் பாடங்கேட்டுப் பயன் என்ன?

86. **பரிவிராசகர்:** கவனி! அறிவு அபூர்வ ஞானத்துக்கு வழி யிடுகிறது. அபூர்வ ஞானம் தன்னடக்கத்துக்கு வழி நடத்துகிறது. தன்னடக்கம் தவத்திற்கு, தவம் யோகா சனத்திற்கு, யோகாசனம் முக்காலத்தையும் உணரும் மெய்யுணர்வுக்கு, மெய்யுணர்வு இவையெல்லாம் ஒன்றாகி எண்வகைச் சம்பத்துக்களையும் பெற்றுத் தருகிறது.

87. **சாண்டில்யன்:** ஆண்டவனே, தங்களது தத்துவப்படி தங்களது பேச்சு என் இதயத்தைத் தாண்டி அரூப அண்டவெளியை எட்டுகிறது. அப்படியானால் அரூபமாக அயலார் வீட்டில் நுழைய உம்மால் ஆகுமோ?

88. **பரிவிராசகர்:** உன் மனதில் என்ன நினைக்கிறாயோ?

89. **சாண்டில்யன்:** அவ்வரூப வழியாக நன்றாக அமைக்கப்பட்ட உணவை பௌத்த சங்கத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியுமா என்றுதான்.

90. **பரிவிராசகர்:** இது உனக்குப் பொருந்தாத ஆசை.

91. **சாண்டில்யன்:** அது ஒன்றிற்காகவே உமது தலையை மழித்துக் கொண்டீர். வேறு காரணம் ஏதும் என்னால் காணமுடிய வில்லையே.

92. **பரிவிராசகர்:** இல்லை, அப்படியில்லை. யோகமானது:

அகண்டது அழியாதது விலையுயர்ந்தது
அறிவானது அசைக்கவியலாதது
அந்தணரும் போற்றுவது
கடவுளொடு பூதங்களும் கொண்டாட நின்றதது.

93. **சாண்டில்யன்:** யோகாசனத்திலே நீங்கள் கருத்தைச் செலுத்துகின்றீர்கள். நான் உணவிலேயே கருத்தைச் செலுத்துகிறேன். ஆண்டவனே! யோகாசனம், யோகாசனம்! சந்நியாசிகள் அதிகமாகச் சிந்தனை செய் கிறீர்கள். அதென்ன யோகாசனம்!

94. **பரிவிராசகர்:** அறிவின்வேர் தவத்தின் சாரம்
மெய்யின் அடித்தளம் மிரட்சிக்கு முடிவு விருப்பு
வெறுப்பினிடை விடுதலையாம் சொல்லின் அதன்
பெயரே யோகாசனம்.

95. **சாண்டில்யன்:** உணவுப்பித்தே உலகப் பைத்தியங்களுக்கெல் லாம் மூலமென்று கற்பித்தாரே புத்தர் அவர் வாழ்க!

96. **பரிவிராசகர்:** சாண்டில்யா, என்ன இது?

97. **சாண்டில்யன்:** காலையிலே உணவு கிடைக்கும் என்று தான் நான் முதலில் புத்த மதத்தில் சேர்ந்தேன் என்று ஆண்ட வருக்குத் தெரியாதா?

98. **பரிவிராசகர்:** ஞானமான வார்த்தைகள் ஏதேனும் வேறு உன்னிடம் உண்டா?

99. **சாண்டில்யன்:** ஓ, உண்டு, உண்டு, ஏராளம் உண்டு.

100. **பரிவிராசகர்:** மெத்த சரி. நாம் கேட்போம்.

101. **சாண்டில்யன்:** ஆண்டவரே கேளும். எட்டுப் படிகள் அடங் கிய இயற்கை, பதினாறு பேறுகள், ஆன்மா, ஐந்திரக் காற்று, உள்ளத்தின் மூன்றடுக்கு இலட்சணங்கள், ஆக்கமும் அழிவும், புனித புத்தர் தமது பதிகா புத்தகத் தில் சொல்லியுள்ளவை அவை.

102. **பரிவிராசகர்:** சாண்டில்யா, அது சாங்கிய கொள்கைகள். புத்தரின் கொள்கைகள் அல்ல.

103. **சாண்டில்யன்:** பசியாலும் சாப்பாட்டு ஏக்கத்தாலும் ஒன்றை நினைத்து வேறொன்றைச் சொல்லிவிட்டேன். கேளுங்கள் ஆண்டவனே.

தராத பொருளை எடுத்துக்கொள்வது எங்கள் கொள்கையல்ல.
வாழ்வை அழிப்பது எங்கள் கொள்கையல்ல.
வீண் பேச்சு பேசுவது எங்கள் கொள்கையல்ல.
காமத்தில் திளைப்பது எங்கள் கொள்கையல்ல.
நினைத்த நேரம் உண்ணுவது எங்கள் கொள்கையல்ல.
புத்தம் தருமம் சங்கம் சரணம் கச்சாமி!

104. **பரிவிராசகர்:** சாண்டில்யா உனது சொந்த நெறிமுறை களிலிருந்து நழுவி அடுத்தவர் நெறிகளைப்பற்றிப் பேசுவது அழகல்ல.

இருளை விட்டகன்று பாவக்கரையகற்றி
இயன்ற வரை புனிதத்திற்கு ஒப்படைத்து
இப்பொழுதே தவத்தைச் செய்
அப்பொழுதே தெளிவடைவாய்
அப்படியே எட்டிவிடும் உன் தத்துவம் மெய் யுணர்வை.

105. **சாண்டில்யன்:** ஆண்டவர் தமது கவனத்தை யோகாசனத் தில் செலுத்தட்டும். நான் எனது எண்ணத்தை உணவிலேயே ஓடவிடுகிறேன்.

106. **பரிவிராசகர்:** அந்தப் பேச்சை நிறுத்து:

உணர்ச்சி வெளிக்கும் உள்ளான்மா தன்னதற்கும்
ஊடான ஒற்றுமையை உணர்ந்திடுக
உள்ளிடுக உலகத்தை அக்கூட்டுச் சட்டத்தினுள்
உயரறிவு தன் வழியே உயருண்மை விளங்கட்டும்
உலகத்து உயிரோட்டம் உந்தனுக்குள் தெரியுட்டும்.

(இரண்டு பணிப்பெண்களுடன் ராஜகணிகை பிரவேசிக்கிறாள்)

107. **ராஜகணிகை:** பெண்ணே மதுகாரிகா எங்கே இராமில்கன்?

108. **பணிப்பெண் மதுகாரிகா:** அஜ்ஜுகா, பிரபு வந்துவிடுவேன் என்று சொல்லிவிட்டு பட்டணம் போயுள்ளார்.

109. **ராஜகணிகை:** எதற்காக இருக்கும்?

110. **பணிப்பெண் (ம):** வேறு எதற்கு? நண்பர்களைக் கண்டு அவர்களை விரைவுபடுத்த.

111. **ராஜகணிகை:** இதுவரை களியாட்டங்களிலே கிடைத்த மகிழ்ச்சி இன்னும் அவருக்குப் போதவில்லை.

112. **பணிப்பெண் (ம):** தாங்கள் சொல்லுவது சரியே அஜ்ஜுகா! மதுவே உல்லாசத்துக்கு உறுதுணை. போதை ஊட்டுவதும் கூட. சிரிக்கவைக்கிறது. பெண்ணைச் சல்லாபிக்கச் செய்கிறது.

Tamil heritage Foundation

113. **ராஜகணிகை:** போ, போய் விரைவில் வரச் சொல்.

114. **பணிப்பெண் (ம):** அப்படியே ஆகட்டும் அஜ்ஜுகா.
(அவள் வெளியேறுகிறாள்.)

115. **ராஜகணிகை:** பரப்பிரிதிகா, எங்கே நாம் உட்காரலாம்?

116. **பணிப்பெண் பரப்பிரிதிகா:** அஜ்ஜுகா, அதோ அந்த கல் திண்டில் சற்று அமர். ஒரு மாமலர் அதற்கு அழகுத் திலகமாகும். அஜ்ஜுகா ஒரு பாட்டு பாடுங்களேன்.

117. **ராஜகணிகை:** நல்லது பரப்பிரிதிகா.

(இருவரும் உட்கார்ந்து பாடுதல்)

காதற்கிறைவன் மன்மதனன் இச்சோலைதன்னில்
நிற்கின்றான்
குயிலின் வண்டின் இசையாக வில்லின் நாணை
இசைக்கின்றான்
மாவரும்பவனுக்கு அம்பாகி மாதவர் மனங்களை
அலைக்கிறது.

118. **சாண்டில்யன்:** (கேட்டவண்ணம்) . . . ஆஹா குயிலோசை. இல்லை. இது குயிலோசையில்லை. என்ன இது? (புரிந்து கொண்டு) தேன் கலந்த பாயாசம்போல ஒரு பாட்டின் இனிய ராகம் (அவன் கடந்து சென்று பார்க்கிறான்). ஆ! அந்த இளநங்கை யார்? அணிபூண்ட ஓர் அலங்காரம் இந்த பூங்காவுக்கே அணிகலனாக விளங்குகிறதே.

119. **பணிப்பெண் (ப):** அஜ்ஜுகா.

120. **சாண்டில்யன்:** ஓ . . . ஹோ . . . ராஜகணிகையா? பணம் படைத்தவர்கள் புண்ணியவாளர்கள்!

121. **பணிப்பெண் (ப):** அஜ்ஜுகா, இன்னொரு பாடல்?

122. **ராஜகணிகை:** நல்லது.

இரதிதன் கடைக்கண் பாங்கனவன்
மன்மதன் தென்றலால் மயங்கிடவே
அசோக மலர் தன் நாண் தொடுக்கும்
அறவோர் மனமும் தடுமாறும்.

123. **சாண்டில்யன்:** எவ்வளவு இனிமையாகப் பொழிகிறது அவளது குரல்! ஆண்டவனே கேளுங்கள்.

124. **பரிவிராசகர்:** சொற்களை மட்டும் கேட்டேன். அதன் சம்மந்தத்தில் கவனம் செலுத்தவில்லை.

125. **சாண்டில்யன்:** பணம் மட்டும் உங்களிடம் இருந்தால் உடனே சம்மந்தத்தை உண்டாக்கிக்கொள்வீர்கள்.

126. **பரிவிராசகர்:** போ! போ! முறையாகப் பேசு.

127. **சாண்டில்யன்:** சினங்காக்க . . . சன்னியாசிகள் கோபங் கொள்ளக்கூடாது.

128. **பரிவிராசகர்:** சரி, வாயே திறக்கவில்லை . . .

129. **சாண்டில்யன்:** இப்போதுதான் நீங்கள் ஞானி.

(எமதூதன் வருகிறான்)

130. **எமதூதன்:** இதோ, வந்துவிட்டேன்.

உலகில் கடன் முடித்தவர் உயிர் எடுப்பவர்
உள்ள நல்லதல்லதற்கு சாட்சி நிற்பவர்
உயர் காலதேவர் எனக் காணையிட்டனர்
உடலினின்றுயிர் பிரிக்கவே முடியுங்காலையே.

அதனால் . . .

உலகின் நாடு பல கண்டு வந்தேன்
உள்ள ஆறுமலை இவைதாண்டி வந்தேன்
ஊற்றும் மேகமுறை ஊர்ந்து வந்தேன்

உருசாரண சித்தர் கின்னரர் நிறைந்த ஒரு
உச்சி மண்டலம் கடந்து வந்தேன்
உன்னதகால தேவர் சொல்லிய
உசித பட்டினம் எண்ணப்படி கடுகி வந்தேன்.

எங்கே அவள்? (பார்த்து)

பொன்னுருக்கிய வண்ண அசோக மலர்
மென்போதுக்கொத்தென நின்றிலங்கினள்
இனி மாலை முகிலிடை கூர்த்த வெண்ணிலா
தன்னொளியாய் இக்கணிகை இருக்கிறாள்.

சரி, இன்னும் சிறிது நேரம் இருக்கிறது. சற்றுப் பொறுத்திருந்து இவளது உயிரைக் கவரலாம்.

131. **பணிப்பெண் (ப):** அஜ்ஜுகா இந்த அசோக மொட்டு பார்வைக்கு அழகாக இருக்கிறது. நான் அதைப் பறித்துக் கொள்ளுகிறேன்.

132. **ராஜகணிகை:** வேண்டாம், வேண்டாம். நான் பறிப்பேன்.

133. **எமதூதன்:** நல்லவேளை. பாம்பாக மாறிக்கொண்டு அந்த அசோக மரக்கிளையில் மறைந்துகொள்ளுகிறேன். கடித்து அவளது உயிரைக் கவருகிறேன். ஆனால் ஒன்று,

கனிமொழி இன்முக சியாமள வண்ண இளங்கன்னி
சந்தனமணிந்தவள் அகன்மருங் குடையாள்
விழியோ மயக்கும் சிவப்பாம்பல் வெகுவாய்
அருளைத்தான் சுரக்கும்
சுமந்தேகிடுவேன் இவளுயிரை எமனிடமே!

(ராஜகணிகை மலரைப் பறிக்கிறாள்)

இதுதான் கடிப்பதற்கு தருணம்.

134. **ராஜகணிகை:** ஆ . . . ஏதோ என்னைக் கடித்துவிட்டது.

135. **பணிப்பெண் (ப):**

(மரக்கிளைகளைப் பார்த்துவிட்டு) அஜ்ஜுகா,

அம்மா! அதோ ஒரு பாம்பு மரக்கிளையில்!

136. **ராஜகணிகை:** பாம்பா! (கீழே சாய்கிறாள்.)

137. **சாண்டில்யன்:** (முன்னே போய்) பெண்ணே, என்ன இது?

138. **பணிப்பெண் (ப):** அஜ்ஜுகாவைப் பாம்பு கடித்து விட்டது.

139. **சாண்டில்யன்:** ஐயோ! ஆண்டவனே! ராஜகணிகையைப் பாம்பு கடித்துவிட்டது.

140. **பரிவிராசகர்:** அவளுக்கு நேரம் வந்திருக்கலாம்.

வினைப்பயனைத் துய்ப்பதற்கே மக்கள்
விதிப்படியே தோன்றுகிறார் இங்கே
அதுபடியே உயிர் முடித்த பின்னே
மறுபடியோர் உடலேற்பர் எங்கோ.

141. **பணிப்பெண் (ப):** வலிக்குதோ அம்மா?

142. **ராஜகணிகை:** எனது உடலைக் கிழிப்பதுபோல் இருக்கிறது. என் உயிரே உருளுவதுபோல் இருக்கிறது. நான் படுத்துக்கொள்ளவேண்டும்.

143. **பணிப்பெண் (ப):** படுத்து இளைப்பாறு அஜ்ஜுகா.

144. **ராஜகணிகை:** அம்மாவுக்கு எனது வணக்கத்தைச் சொல்லு.

145. **பணிப்பெண் (ப):** கவலைப்படாதிருங்கள். நீங்களே போய் அம்மாவுக்குச் சொல்லலாம்.

146. **ராஜகணிகை:** இராமிலகாவை அரவணை . . .

*(அவள் மூர்ச்சையடைந்து விடுகிறாள்)*

147. **பணிப்பெண் (ப):** ஐயோ! அஜ்ஜுகா இறந்துவிட்டாள்.

148. **எமதூதன்:** இதோ! இவளது உயிரைப் பறித்தாயிற்று. இப்பொழுது:

கங்கை விந்தியம் நன்னீர் நர்மதம்
சாகாய மலைத்தொடர் குறுவளை கிருஷ்ண
காஞ்சி செம்மைப் பசுபதியாலயம்
சீரோடு காவிரி பொருனையொடு பொதிகையும்
காற்றினுங்கடுகிக் கடந்திடுவேன்
கடலுக்கு அப்பால் ஈழமும் தாண்டி
கோலகால தேவனுழைச் சேர்ந்தேனே.

அதோ கிளைகள் படர்ந்த ஆலமரம் அங்கே
அமர்ந்திருக்கும் சித்திரகுப்தனை அணுகுவோம்.

*(அவன் மறைந்துவிடுதல்)*

149. **பணிப்பெண் (ப):** ஐயோ, அஜ்ஜுகா!

150. **சாண்டில்யன்:** ஆண்டவனே, இந்த இளமை பொங்கும் ராஜகணிகை உயிர் துறந்துவிட்டாள்.

151. **பரிவிராசகர்:** முட்டாளே, உயிர் என்பது உணர்ச்சி. உலகில் விலையேறப்பெற்ற ஒரு பொருள். உயிர் உடலைத் துறந்துவிட்டதென்றுதான் கூறவேண்டும்.

152. **சாண்டில்யன்:** விலகிப்போம். இரக்கமற்ற, நட்பறியாத, கல்நெஞ்ச, கேட்டு மதிக்காத, பணிவற்ற, வெறுக்கத் தக்க, பிடிவாத, வீணுக்குமழித்த . . .

153. **பரிவிராசகர்:** என்னதான் நினைப்பு?

154. **சாண்டில்யன்:** நூற்றெட்டுத் துதிகளையும் முடிக்கவிடுங்கள்.

155. **பரிவிராசகர்:** ஓ, தாராளமாக.

156. **சாண்டில்யன்:** ஆண்டவனே, நான் துக்கப்படுகிறேன்.

157. **பரிவிராசகர்:** ஏன்? எதற்காக?

158. **சாண்டில்யன்:** அவள் நம்மில் ஒருத்தி.

159. **பரிவிராசகர்:** எப்படி அவள் நம்மில் ஒருத்தி.

160. **சாண்டில்யன்:** அவள் சன்னியாசிகளைப்போலவே குறைந்த அளவு பற்றும் இல்லாதவள்.

161. **பரிவிராசகர்:** பற்றற்றவர்களும் தங்களுக்கு வேண்டுவன வந்து உச்சநிலையில் நிற்கும்போது தளர்ந்துவிடுகிறார்கள்.

பற்றின்பின் செல்லலை முற்றும் ஒறுத்தவர்
உற்ற சாத்திரத் திண்வழி செல்பவர்
மற்றும் இவ்வுலகப் பற்றினை விட்டவர்
உயர் பண்பிலே ஆவலைக் காட்டிடும் நெஞ்சினர்.

162. **சாண்டில்யன்:** ஓ . . . ஆண்டவரே . . . என்னால் அடக்கிக் கொள்ள முடியவில்லை. தூரமாகப்போய் அழுதுவிடு கிறேன்.

163. **பரிவிராசகர்:** போகாதே! போகாதே!

164. **சாண்டில்யன்:** கோபிக்க வேண்டாம். துறவிகள் கோபங் கொள்வது முறையல்ல.

*(ராஜகணிகையின் பக்கம் சென்று)*

ஓ . . . அஜ்ஜூகா, அம்மா, இனிக்கப் பாடுபவளே.

165. **பணிப்பெண் (ப):** ஐயோ, இதென்ன?

166. **சாண்டில்யன்:** இரங்கல் . . . அம்மா . . .

167. **பணிப்பெண் (ப):** *(தனக்குள்)* ஆமாம், நல்லவர்களெல் லாம் இரங்குகிறார்கள்.

168. **சாண்டில்யன்:** அம்மா, இவளை நான் தொடலாமா?

169. **பணிப்பெண் (ப):** ஓ . . . அப்படியே ஐயா.

170. **சாண்டில்யன்:** ஓ, அம்மா! *(பாதங்களை அவன் தொடுகிறான்.)*

171. **பணிப்பெண் (ப):** அவளது பாதங்களைத் தொடாதீர்!

172. **சாண்டில்யன்:** ஐயோ, நான் குழம்பியுள்ளேன். பாதமெது தலையெதுவெனத் தெரியவில்லை. அய்யோ, தெங்கிள நீர்போல பருத்த அழகு முலைகள்—கருஞ்சாந்தம் பூசியது, குத்தும் கூர்மையின. அவள் உயிர் வாழும்போது அவைகளால் குத்தப்பட்டு நான் மாளாதது என் துரதிஷ்டம்.

173. **பணிப்பெண் (ப):** (தனக்குள்) இப்படிச் செய்யலாம். (சப்தமாக) ஐயா, அஜ்ஜுகாவைச் சற்று கவனித்துக் கொள்ளுங்கள். அவளது தாயைக் கூட்டி வருகிறேன்.

174. **சாண்டில்யன்:** சீக்கிரம் போ, தாயற்றவர்களுக்குத் தாய் போலிருக்கிறேன்.

175. **பணிப்பெண் (ப):** (தனக்குள்) இந்த அந்தணன் அன்பு மிகுந்தவன். அஜ்ஜுகாவை விட்டுப் போகிறானில்லை. நான் சென்று வருகிறேன். (அவள் போகிறாள்.)

176. **சாண்டில்யன்:** அவள் போய்விட்டாள். என் மன திருப்திக்காக நான் அழுதுவிடுகிறேன். ஓ . . அஜ்ஜுகா, இனிக்கப் பாடுபவளே . . .

(அவன் ஏங்கி அழுகிறான்)

177. **பரிவிராசகர்:** சாண்டில்யா வேண்டாம் . . .

178. **சாண்டில்யன்:** விலகிப் போகும். நெஞ்சமில்லாத மனிதரே, உம்மைப்போல என்னை நினைத்தீரோ?

179. **பரிவிராசகர்:** மகனே வா, பாடங்கேள்.

180. **சாண்டில்யன்:** ஆண்டவனே, எந்தப் பாடத்தைக் கேட்பது? கைவிடப்பட்ட இந்த அப்பாவிப் பெண்ணுக்கு எப்படி வைத்தியம் செய்வது என்று?

181. **பரிவிராசகர்:** மருத்துவ விதிகளை வைத்துக்கொண்டு நீ என்ன செய்யப்போகிறாய்?

182. **சாண்டில்யன்:** உமது யோகாசனத்தின் பலனே பாவந்தான்.

183. **பரிவிராசகர்:** (தனக்குள்) கடமையின்பால் இந்த அப்பாவிப் பயலின் அசட்டை. சிறிது உலகத் தொடர்பொன்றும் கெடுதலில்லை என்னும் மஹேஸ்வர ஆசாரியர்களின் சொல்லைக் கேட்டிருக்கிறான். யோகாசன சக்தியினால் இந்த ராஜகணிகையின் உடலினுள் நுழைந்து ஆன்மா ஒன்று உள்ளது என்பதை இவனுக்கு எடுத்துக்காட்டுகிறேன்.

184. ராஜகணிகை: (விழித்தெழுந்து) சாண்டில்யா . . . சாண்டில்யா . . .

185. சாண்டில்யன்: (மகிழ்ச்சியுடன்) ஓ . . . உயிரோடிருக்கிறாள். உயிர் திரும்ப வந்துவிட்டது. இதோ . . . இதோ . . . இருக்கிறேன்.

186. ராஜகணிகை: கழுவாத உன் கையினாலே என்னைத்தொடாதே!

187. சாண்டில்யன்: மிகப் புனிதமாயிருக்கிறாள் இவள்.

188. ராஜகணிகை: வா மகனே . . . பாடங்கேள்.

189. சாண்டில்யன்: இங்கேயும் பாடங்கேளா? நான் ஆண்டவனிடமே கேட்கிறேன். (நெருங்கி) ஆண்டவனே, ஐயோ ஆண்டவர் இறந்துவிட்டார். ஓ . . . நிலைபெயராத ஒன்றே, யோகாசனத்தின் சொத்தே, ஓ . . . குருவே . . . பெரும் அறிஞரும் சாகிறார்கள்.

(பரப்பிரிதிகாவும் தாயும் வருகிறார்கள்)

190. பணிப்பெண் (ப): வாருங்கள் தாயே வாருங்கள்.

191. தாய்: எங்கே என் மகள்.

192. பணிப்பெண் (ப): இந்த சோலையில்தான் அஜ்ஜுகாவை பாம்பு கடித்தது.

193. தாய்: ஐயோ, விதிகெட்டவள் நான் அழிந்தேன்.

194. பணிப்பெண் (ப): அமைதி, அமைதி, அஜ்ஜுகா உயிரோடிருக்கிறாள்.

195. தாய்: அவளுக்கு ஒன்றுமில்லையே, மகளே வசந்தசேனை இது என்ன?

196. ராஜகணிகை: மூதாட்டியே என்னைத் தொடாதே.

197. தாய்: ஐயோ, பாவமே இது என்ன?

198. பணிப்பெண் (ப): விஷம் நேராக தலைக்கு ஏறிவிட்டது.

199. தாய்: சீக்கிரம் போ, ஒரு மருத்துவரை அழைத்துவா.

200. பணிப்பெண் (ப): அப்படியே தாயே. (போகிறாள்.)

(இராமிலகனும் பணிப்பெண் மதுகாரிகாவும் வருகிறார்கள்)

201. பணிப்பெண் (ப): வாழ்க, வாழ்க, ஐயனே. அஜ்ஜுகா தங்களுக்காக ஏங்கிக்கொண்டிருக்கிறாள்.

202. **இராமிலகன்:**

அகல் விழி இரக்கத்து அவளழகு மொழிவழியே
இன்முகச் சுவையழகைப் பருக வேண்டுகிறேன்
தகவமைந்து தேனூதும் துந்துமிக்கு எனவமைந்த
மெல்லிதழின் தாமரை போல் முகவழகே.

(அவள் அருகில் சென்று) என்னைக் கண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள். எப்படி?

(ஆடையின் முனையை இழுக்கிறான்)

சிற்றலை திருப்பும் செங்கமலம் போல்
உரு கொண்ட அருளே திரும்பாயே
சிந்தா தெங்கிலை சிறு பனிபோல்
உள்ளம் அள்ளுதே குறுநோக்கும்.

203. **ராஜகணிகை:** அசட்டைக்காரரே, என் ஆடையின் முனையை விட்டுவிடும்.

204. **இராமிலகன்:** அன்பே இதுவென்ன?

205. **தாய்:** பாம்பு தீண்டியது முதலே சம்பந்தமில்லாமல் பேசுகிறாள்.

206. **இராமிலகன்:** அப்படியா?

வேற்றொருவர் சக்தியுடன் பற்ற நின்றாள்
வேறுபடி மயக்கம் தானும் காட்டுகின்றாள்.

(மருத்துவரும் பணிப்பெண் பரப்பிரிதிகாவும் வருதல்)

207. **பணிப்பெண் (ப):** வாருங்கள் ஐயா, வாருங்கள். (வருதல்.)

208. **மருத்துவர்:** எங்கே அவள்?

209. **பணிப்பெண் (ப):** அதோ அஜ்ஜுகா, அவள் சரியாக இல்லை.

210. **மருத்துவர்:** பெரும் பாம்பே அணுகியிருக்கிறது என்று நினைக்கிறேன்.

211. **பணிப்பெண் (ப):** எப்படித் தெரிகிறதையா?

212. **மருத்துவர்:** எப்படியென்றால், அவளது செயல்கள் விபரீதமாக இயற்கைக்கு முரணாக உள்ளன. எனது ஆயுதங்களை எல்லாம் கொண்டுவா. விஷத்துக்கான மருத்துவத்தைத் தொடங்குகிறேன். (உட்கார்ந்து ஒரு வட்டம் வரைகிறார்.)

சுருண்டு குறுகும் ஒன்றே, இந்த வட்டத்துள் போ, நுழைந்து போ, வாசுகியின் மகனே நில்... நில்... சூ... சூ... உன்னுடைய மண்டையை உடைப்பேன். எங்கே கோடரி?

213. **ராஜகணிகை:** முட்டாள் வைத்தியரே, உம்மைக் கெடுத்துக் கொள்ளாதேயும்.

214. **மருத்துவர்:** ஓஹோ? பித்தக் கோளாறு? உனது பித்தவாத கிலேசத்தைப் போக்கிவிடுகிறேன்.

215. **இராமிலகன்:** முயற்சியுங்கள். நன்றி மறக்கமாட்டோம்.

216. **மருத்துவர்:** பாம்பு கடிக்கென்று ஒரு நல்ல குளிகை கொண்டுவருகிறேன். *(அவர் வெளியேறுகிறார்.)*

*(அப்பொழுது எமதூதன் வருகிறான்)*

217. **எமதூதன்:** ஓகோ! எமராஜர் என்மீது பாய்கிறார்.

அல்ல இந்த வசந்தசேனை அல்லவடா
கொண்டேகு இவளை அங்கே திரும்பவடா
அடுத்து விதிமுடிந்த வசந்தசேனை உண்டு அடா
கொண்டுவா சென்றவளை இங்கேயடா.

அவளது உடல் தகனம் செய்யப்படவில்லை யென்றால் அவளது உயிரை அங்கேயே நிலைப்படுத்தி விடுவேன்.

*(அவளைக் கண்டு)* ஆ! அவள் எழுந்துவிட்டாள். என்ன இது?

இங்கென் கையிலிவள் உயிரிருக்க
எழுந்துவந்து கணிகை இவள் நிற்கிறாளே?
இவ்வுலகம் இதுகாறும் கண்டதில்லை
என்னவரு விந்தையிது இது போலே.

*(சுற்றிப் பார்த்து)* ஆ! யோகி சன்னியாசிப் பயல் ஒருவன் அங்கு கிடக்கிறான். என்ன செய்யலாம்? பார்க்கலாம். ராஜகணிகையின் உயிரை சன்னியாசியின் உடலில் வைக்கிறேன். கூத்து முடிந்தவுடன் சரிப்படுத்திவிடுகிறேன்.

*(அப்படியே செய்கிறான்.)*

அந்தணன் உடலுக்குள்ளே பெண்ணினுவி
அதன் செயல்களெல்லாம் மேவி இனி
ஆன்மத்தின் இயல்பின் வழி மாறிவிடும்.

*(அவன் மறைகிறான்)*

218. **பரிவிராசகர்:** *(எழுந்து)* பரப்பிரிதிகா, பரப்பிரிதிகா.

219. **சாண்டில்யன்:** ஆ! ஆண்டவருக்கு உயிர் வந்துவிட்டது. கருமம் செய்தவர்கள் எளிதாகச் சாவதில்லை.

220. **பரிவிராசகர்:** எங்கே, எங்கே இராமிலகன்?

221. **இராமிலகன்:** ஆண்டவனே, இதோ அடியேன்!

222. **சாண்டில்யன்:** ஆண்டவனே, இது என்ன? திருவோடு ஏந்தத் தகுந்த உமது இடது கை ஏராளமான சங்கு வளையல்களை அணிந்துள்ளதுபோல எனக்குத் தெரிகிறதே!

223. பரிவிராசகர்: இராமிலகா, என்னை அணைத்துக்கொள்.

224. சாண்டில்யன்: உமது திருவோட்டை அணைத்துக்கொள்ளும்.

225. பரிவிராசகர்: நான் இராமிலகன்மீது மயங்கிவிட்டேன்.

226. சாண்டில்யன்: இல்லை! இல்லை! உமக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது!

227. இராமிலகன்: பொருளற்ற இவரது பிதற்றல் ஆண்டவன் என்ற பெயருக்கே களங்கம்.

228. பரிவிராசகர்: எனக்கு மது வேண்டும்.

229. சாண்டில்யன்: விஷத்தைக் குடியும்! சரி, சரி, கிண்டலுக்கும் ஒரு அளவு முறை இருக்கிறது. இது ஆண்டவனுமில்லை ... அஜ்ஜுகாவுமில்லை . . . ஆண்டவஜ்ஜுகா* என்றுதான் அழைக்கவேண்டும்.

230. பரிவிராசகர்: பரப்பிரிதிகா, பரப்பிரிதிகா, என்னை அணைத் துக்கொள்.

231. பணிப்பெண் (ப): விலகிப் போகும்.

232. தாய்: மகளே—வசந்தசேனு.

233. பரிவிராசகர்: அம்மா, நான் இதோ உள்ளேன். எனது வாழ்த்துக்கள் அம்மா . . .

234. தாய்: சாமி . . . இது என்ன?

235. பரிவிராசகர்: அம்மா, என்னை உங்களுக்குத் தெரியும் இல்லையா? இராமிலகா நீ இன்று பிந்திவிட்டாய்.

236. சாண்டில்யன்: அப்படியே இருக்கட்டும்.

(மருத்துவர் வருகிறார்)

237. மருத்துவர்: மருந்தும் நாலுதோலா குளிகையும் கொண்டு வந்திருக்கிறேன். பிழைப்பாளோ? மரிப்பாளோ? தண்ணீர் . . . தண்ணீர். (அருகில் சென்று.)

238. பணிப்பெண் (ப): இதோ தண்ணீர்.

239. மருத்துவர்: இந்தக் குளிகையைப் பொடி பண்ணுகிறேன். ஆ . . . அவளுக்கு கடியில்லை, பேய்பிடித்திருக்கிறது.

240. ராஜகணிகை: முட்டாள் வைத்தியனே, பயனற்ற கிழமே, உயிர்கள் எப்படி மடிகின்றன? உனக்குத் தெரியவில்லை. எந்த வகைப் பாம்பு அவளைக் கொன்றிருக்கிறது? சொல்லும் பார்ப்போம்.

---

* ஆண்டவஜ்ஜுகம் = பகவதஜ்ஜுகம்.

241. மருத்துவர்: இது ஒரு பெரிய காரியமா?

242. ராஜகணிகை: ஏதும் விதிமுறை உண்டா?

243. மருத்துவர்: ஏராளம். ஆயிரத்து ஐந்நூறு வரை.

244. ராஜகணிகை: சொல்லும். விதிமுறைகளை எங்களுக்குச் சொல்லும்.

245. மருத்துவர்: கேளுங்கள்: வாதம், பித்தம், சிலேசம். அ . . . புத்தகம் . . . புத்தகம் . . .

246. சாண்டில்யன்: ஓஹோ . . . மெத்த படித்த வைத்தியர் முதல் வரியே மறந்துவிட்டார். இருக்கட்டும். நண்பர் தானே, இதோ புத்தகம்.

247. மருத்துவர்: கேளுங்களம்மா . . .

'வாத பித்த சிலேசனமாம்
இந்த விடங்கள் மிகக் கொடியனவாம்
மூன்றன் இவைகள் கொடு நாகங்களாம்
நான்கென்றளவு ஒன்று இதில் இல்லையதாய்.'

248. ராஜகணிகை: ஒரு சொல் தவறு. மூன்றன் என்றல்ல. மூன்று என்று குறிப்பிடவேண்டும். மூன்று என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவான பால். ஆண்பால் அல்ல.

249. மருத்துவர்: ஆ . . . அப்படியானால் இலக்கணப் பாம்பே கடித்திருக்கவேண்டும்.

250. ராஜகணிகை: விஷம் ஏறும் விஷயத்தில் எத்தனைப் படிகளுண்டு.

251. மருத்துவர்: நூறு.

252. ராஜகணிகை: இல்லை, இல்லை. ஏழு படிகளே. இப்படி:

முகங்கருத்தல் வாயுலர்தல்
நிறம் மாறல் உடல் நடுங்கல்
விக்கல் முணங்கல் மூர்ச்சையாதல்
நாடின் விடமேறும் ஏழு படிகள்.

இதைக் கடந்து விடமேறிவிட்டால் வானுலக மருத்துவராலும் மாற்றமுடியாது. இதற்குமேல் ஏதும் இருந்தால் சொல்லும் . . .

253. மருத்துவர்: இது மெய்யாகவே எங்களுக்குப் பாடமில்லை . . . வணக்கம் தாயே . . . வருகிறேன்.

(எமதூதன் வருகிறான்)

254. எமதூதன்: ஆ . . . இது . . .

கருச்சிதைவு கட்டி காய்ச்சல் காதுநோய்
கடுஞ்சூலை கண் மூளை நெஞ்சடைப்பு
கணக்கிட்டு நோய் பலவும் நான் சொல்வேன்
இதுகணமே வகை பலவாய் ஜீவன்களை
காலநகர் கொண்டு செல இருக்கின்றன.

நான் எமராஜன் ஆணைவழி செல்லவேண்டும் . . .
(ராஜகணிகையிடம் சென்று) ஆண்டவனே, பெண்ணுடலை விட்டுவிடும்.

255. ராஜகணிகை: அப்படியே!

256. எமதூதன்: என் கடமையைச் செய்து அவளது உயிரை மாற்றிவிடுவேன்.

(அவன் அப்படியே செய்துவிட்டு மறைகிறான்)

257. பரிவிராசகர்: சாண்டில்யா! சாண்டில்யா!

258. சாண்டில்யன்: பழைய நிலைக்கு ஆண்டவன் வந்துவிட்டார்.

259. ராஜகணிகை: பரப்பிரிதிகா! பரப்பிரிதிகா!

260. பணிப்பெண் (ப): அஜ்ஜுகா முன்போலவே பேசுகிறாள்.

261. தாய்: மகளே, வசந்தசேனை . . .

262. இராமிலகன்: ஆ . . . அவள் மகிழ்ச்சியாக இருக்கிறாள் . . . அன்பே வசந்தசேனை இப்படி வா!

(ராஜகணிகை இராமிலகனுடனும் பணிப்பெண்களுடனும் தாயுடனும் செல்கிறாள்)

263. சாண்டில்யன்: ஆண்டவனே, இதெல்லாம் என்ன?

264. பரிவிராசகர்: அது பெரிய கதை. நமது இருப்பிடத்திற்குப் போனதும் மறுபடி சொல்லுகிறேன். (சுற்றிப் பார்த்து) பொழுது போய்விட்டது . . . இப்பொழுது:

பொன்னுருக்கும் பாண்டத்து முகடுடுத்த தங்கம் போல்
அந்திவானக் கரையினிலே ஞாயிறுபோய் மூழ்கினது
பின்னும் மேகக் கூட்டங்கள் கொப்பளித்த எழிலிலே
அற்புதமாய் சொர்க்கத்துக் கோட்டமொன்று தெரியுது.

(அவர்கள் புறப்படுகிறார்கள்)

உலகங்கள் தோறுமினி யோகங்கள் ஆளட்டும்
வானதூதர் யாவருமே அனுகூலமாகட்டும்
ஊழின் இன்னல் யாவுமே இல்லையாகப் போகட்டும்
மேலும் நாடும் இன்பமே நானிலத்து நிலவட்டும்.

—பகவதஜ்ஜுகம் முற்றிற்று—

பகவதஜ்ஜுக அங்கதம்

Tamil Heritage Foundation

ஆங்கிலப் பதிப்பு
சம்ஸ்கிருத மூலத்துடன் } .. ரூ. 12.00

BHAGAVADAJJUKA ANGATHAM

Edited by MICHAEL LOCKWOOD

Translated by E. JOHN ASIRVATHAM

விலை ரூ. 2·00 (இந்தியாவில் மட்டும்)